வெல்லத்தின் மேல் பல முனை வரி.

* 373 வினா:—திரு. ஆர். கருப்பையா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) வெல்லம், சர்க்கரைக்கு பலமுனை வரி இந்த ஆண்டு அரசினரால் போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இந்த வரியை நீக்கிவிடும் எண்ணம் அரசினருக்குண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம். 1968 ஜனவரி 1-ம் தேதி முதல் அரசாங்கம் பனைவெல்லம் தவிர, தூள் வெல்லம் கட்டி வெல்லம் முதலியவற்றிற்கு 3 சதவீதத்தில் பலமுனை வரி விதித்துள்ளது. சர்க்கரைக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

திரு. ஆர். கருப்பையா: இந்த மாநிலத்தின் முதலமைச்சர் பொறுப்பை மதிப்பிற்குரிய காமராஜர் ஏற்றிருந்த நேரத்தில் வெல்லம் காய்ச்சுவது குடிசைத் தொழில் என்ற காரணத்தால் அதற்கு விற்பனை வரி இருக்கக்கூடாது என்று அதை நீக்கினார்கள். அயல் மாநிலங்களில் கூட இதற்கு வரி இல்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தவுடன் மீண்டும் அதற்கு பலமுனை விற்பனை வரியைக் கொண்டு வந்தது நியாயமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நியாயம் என்று கருதித்தான் இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது.

திரு. இல. பலராமன்: வெல்லத்திற்கு விற்பனை வரி போட்டிருப்பதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? இதைப் பற்றி வியாபாரிகள் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்தார்களே, அதனுடைய முடிவு என்னவாயிற்று?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வெல்லத்திற்கு முதலிலே வரி கிடையாது. இதிலே ஒரு மாதிரியாக லாபம் எல்லாம் வெளியே போகின்ற நிலை இருந்த காரணத்தாலும், அரசாங்கத்திற்கும் வருவாய் அதிகரிக்க வேண்டுமென்ற காரணத்தாலும் இதற்கு வரி போடப்பட்டது. அவ்வாறு வரி போட இந்த அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்று ஹைகோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

திரு. கே. விநாயகம்: வெல்லத்திற்கு இதுவரை வரி இல்லாமல் இருந்தது. இப்போது சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் போடாமல் மல்டி பாயிண்ட் டாக்ஸ் போட்டதால் பல கட்டங்களிலே அதிகமாக வரி செலுத்த வேண்டிய நிலைமையிலே வெல்லம் நமது மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் செல்லுவது குறைந்துவிட்டது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: வெளி மாநிலங்களுக்குப் போகக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கை. இதற்காக மத்திய அரசாங்கத்துடன் போராடிக்கொண்டிருக்கிறோம். இத்தனை மைலுக்கு அப்பால் போனால் தடை செய்யவேண்டுமென்பதற்காக உத்தரவு கொடுக்க வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கிறோம். வெளி மாநிலங்களுக்குப் போய்விடுவதால் ஏழை எளிய மக்களுக்கு கிடைக்க வழி இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து இந்த வரிக்கு ஆதரவாகத்தான் இருக்கிறது.

1969 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

கவன ஈர்ப்பு

(அ) இராமநாதபுரம் பெரிய கண்மாயை தூர்வாரி மராமத்து செய்தல்.

திரு. தங்கப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தாலுக்கா பெரிய கண்மாய் தூர்ந்துபோய் வேளாண்மைக்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு பயிர்கள் சாவியாகி விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாவதால், அக்கண்மாயைத் தூர்வாரி மராமத்து செய்யவேண்டிய அவசிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.: இராமநாதபுரம் பெரிய கண்மாயைத் தூர் வாரிப் புனரமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீடும், வரை படங்களும் ரூபாய் பதினொரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்குத் தயாரிக்கப்பட்டு பொதுப்பணித் துறையினரின் பரிசீலனையிலுள்ளது. இது அரசுக்கு எட்டியதும் அது ஆலோசிக்கப் பெறும்.

திரு. டி. தங்கப்பன்: தலைவர் அவர்களே, அவசியத்தை முன்னிட்டு இந்த ஆண்டிலேயே அந்தக் கண்மாய் வேலைகளைத் துவக்க அரசு அங்கீகாரம் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே குறிப்பிட்டது போல் அவசர அவசியத்தை முன்னிட்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நில அடைமான வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படாமை.

திரு. ஏ. அ. சுப்பராஜா: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு நில அடைமான வங்கியின் மூலமாக ஒப்பளிக்கப்பட்டும் அதற்குண்டான தொகைகளை இதுவரை பட்டுவாடா செய்யாததைப் பற்றிய அவசர அவசியப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1—4—1968 முதல் 15—2—1969 வரை நில அடைமான வங்கிகள் மூலமாக வழங்கப்படுவதற்கென ஒப்பளிக்கப்பட்ட நீண்ட காலக் கடன் தொகை ரூ. 122·43 இலட்சமாகும். இதையொட்டி 28—2—1969 வரை வழங்கப்பெற்ற கடன் தொகை ரூ. 72·59 இலட்சமாகும். அந்தத் தேதியில் வழங்கப் பெறுமல் இருந்த கடன்கள் தொகை ரூ. 49·85 இலட்சமாகும். இந்தத் தொகையினை நில அடைமான வங்கிகள் 31—3—1969-ம் தேதிக்குள் வழங்கி விடும்.